பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

நச்சினார்க்கினியன்

திரிசிரபுரத்தினின்று வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"பச்சைமால் அனைய மேகம் பௌவநீர் பருகிக் கான்ற
எச்சில்,நாற் றிசையும் உண்ணும்: அமிர்தென, எழுநா எச்சில்
மெச்சிநா னாளும் விண்ணோர் மிசைகுவர்: வேத போதன்
'நச்சினார்க் கினியன்' எச்சில் நறுந்தமிழ் நுகர்வர் நல்லோர்"

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"—தமிழ் மறை

தொகுதி 2. } அக்ஷய-௵ கார்த்திகை-௴ 1926-௵ நவம்பர்௴ { பகுதி 11.

பாரத கீதம்.

ஜய ஜய பாரத! ஜய ஜய பாரத!! ஜய ஜய ஜய!!! எனவே
நயமுற நாவினில் அமுதரு சொல்லினை நவில்வது பாக்கியமே.
இயலுறும் இன்னிசை எழுகடல் தரையின் ஏறிட ஓதுகவே
பயமது நீங்கு சுதந்தர வாழ்வு படைத்திடுவோ மெனவே. 1

மன்பதை யாமுடல் வாழுயிர் தாமென மாமனு நூல்நெறியால்
இன்புற மாநிலம் ஆண்டருள் மன்னரை யேய்ந்தனை பண்டொருநாள்
துன்புறு வாரெவ ராயினும் அன்னவர் துன்பம் அகற்றினையால்
நன்புற இவ்வைய கின்பத மோங்கிட நாடுக பாரதமே! 2

சொல்லினில் வல்லவர் எண்ணிலர் நின்னடி சூழ்ந்து பணிந்தனரே.
வில்லினில் வல்லவர் விசயனை யொத்தவர் மேவினர் ஆயிரமே.
மல்லினில் வல்லவர் மாருதி யாதியர் வாழ்ந்தனர் ஆயிரமே.
இல்லினில் மங்கையர் கற்பு விளக்கம் இலங்கிய பாரதமே! 3

வள்ளுவர் கம்பர் முதற்பல பாவலர் வாழ்வுறு தாயகமே!
உள்ளுவர் உள்ளம் உவப்புற உண்மை உணர்த்திய உத்தமியே!
எள்ளுவர் சொல்லும் இதந்தரும் என்ன இறைஞ்சிய எம்மனையே!
துள்ளுவர் தம்மை யடக்கு திருப்பணி சூழ்க எழுந்தருளே. 4

இத்துணை யென்ன இயம்ப வொணாத இயற்கை வளப்பமுளாய்!
முத்தொடு வச்சிர மரகத மாணிக்க மொய்ம்புறப் பூண்டிருந்தாய்.
ஒத்துள நாடெலா மழிருந்தனை உன்நிலை தேய்வதுவோ?
உத்தம ராகிய மக்களை இன்றும் உயிர்த்தனை பாரதமே! 5

—குஞ்சிதபாதம்.

மருவி வழங்கும் சில சொற்கள்.

(286-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற சஞ்சிகையில், 'பன்னான்குழி'யைப்பற்றிப் பிரஸ்தாபிக்கும் பொழுது, 'காசிக்குழி'யைப்பற்றிய பிரஸ்தாபம் நேர்ந்ததைச் சிலரேனும் கவனித்திருக்கலாம். இக் குழிக்கும் புண்ணிய க்ஷேத்ரமாகிய காசிக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. 'காசி' என்பது 'காசு' என்றிருத்தலே நேர். ஆதியில், இப்போது நாம் உபயோகிக்கும் நோட்டு (பலகறை), தட்டுப்பவளம், புளியவிதை முதலியவற்றிற்குப் பதிலாக, அவரவர்கள் நிலைமைக்கேற்ப, சின்னஞ்சிறு காசுகள் (வெண்பொன், செம்பொன், செம்பு முதலியவற்றாலானவை) உபயோகிக்கப்பட்டு வந்தன. இதை மறந்து, அவற்றின் ஸ்தானத்தில் நாம் உபயோகித்துவரும் எப்பொருளையும், 'காசு" எனக் கொண்டுவிட்டோம். எல்லாம் காசே ஆயினும், நடுக்குழியில் தங்குவதே, சிறப்புப்பற்றிக் 'காசு' அல்லது 'பணம்' எனக் கருதப்பட்டது. ஏனெனில், பிறகுழிக் காசுகள், ஆடுவோர் எல்லாராலும் கையாளப்பட்டும், எவர்க்கும் உரிமையாகாதிருப்பன. நடுக்குழிக் காசுகளோ, அவற்றைப் 'பற்றியோர்'க்கே உரியன. இக் காசுகள் நிரம்பிய குழிகளே 'காசு'க்குழிகள்.

இக்குழிகளைப் 'போத்தின'தாக அவற்றை உரிமையாக்கிக் கொண்டவர் கூறுவர். தம் கையால் 'மூடும்' வழக்கத்தால் அது 'போத்தினது' என எண்ணுவது தவறு. 'பற்றின' (அதாவது கைப்பற்றி உரிமையாக்கிக்கொண்ட) என்பதே திருத்தமான சொல். 'பற்றின' என்பது 'பத்தின' என்றாய், இதைத் திருத்த முயன்றோரால் 'பொத்தின' என்று சாமர்த்தியமாகத் திருத்தப்பட்டிருக்கவேண்டும் என்று நினைக்கிறோம். நிற்க.

திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமி 'வேங்கடாஜல பதி' என்றும், அம்மன் 'அலமேலுமங்கா' என்றும் பலர் கூறக் கேட்டுளோம். இவ்விரு பெயர்களும் முறையே 'வேங்கடாசலபதி' என்றும், 'அலர்மேல் மங்கை' (அல்லது அலர்மேல் உறை மங்கை) என்றுமே இருத்தல் வேண்டும்.

ஏனெனில், 'வேங்கடாஜலபதி' என்பது, வெம், கடா, ஜலம், பதி எனப் பிரிந்து 'கொடிய ஆனேட்டு நீர்க்குத் தலைவன்' என்று பொருள்படும். 'வேங்கடாசலபதி' என்பதோ, வேங்கடம்,

அசலம், பதி' எனப் பிரிந்து, (பாவத்தைப் போக்குவதாகிய திரு) வேங்கடம் என்னும் மலையில் எழுந்தருளியுள்ள தலைவன் (ஆன ஸ்ரீநிவாசமூர்த்தி)' எனப் பொருள்படும்.

'அலமேலுமங்கா' என்பதற்குச் சாமானிய அறிவுபடைத்தவர், பொருள் கூறவாவது, பிறர் கூறும் எப்பொருளையும் அங்கீகரிக்கவாவது இயலாது. அலர்மேல் (உறை) மங்கை என்பது '(பூவிற் சிறந்த தாமரைப்) பூவின்மீது வசிக்கும் பெண் (ஆகிய லக்ஷ்மி)' எனப் பொருள்படும்.

நாம் இதைச் சமீபத்திற் பிரஸ்தாபிக்க நேர்ந்தகாலை, வடமொழி வல்லுநர் ஒருவர், "அம்மனது திரு நாமம் தமிழ்மொழிப் பெயரன்று: 'அது அலர்மேல் மங்கை' இல்லை. 'அலோம ஊரு மங்கா' என்ற வடமொழியை, உண்மை அறிய ஆற்றலும், ஆவலுமில்லாத தமிழ்மொழியாளர், தமிழ்மொழியெனக் கொண்டு, தம் புத்திக்கெட்டியவாறு பொருள்கூறத் தலைப்பட்டு விட்டனர்" என்று கண்டித்துரைத்து இரைபலாயினர். 'அலோம ஊரு' என்பதற்கு, 'மயிர் முளையாத துடை' என்பது பொருள் என்றும், அங்ஙனம் இருத்தல் தெய்வீக மென்றும், அவ்வுத்தம லக்ஷணம் வாய்ந்த தேவி என்பதே 'அலோமாஊருமங்க,' என்பதன் பொருளென்றும், தம் போன்றார் மெச்ச எடுத்துரைத்தார். 'இங்ஙனம் பேசிய பிரஹஸ்பதி, 'மங்கா' என்ற சொல்லைப்பற்றிச் சிந்தனையே செய்யவில்லை. இது வடமொழியன்று. 'மங்கை' என்ற ஐகார ஈற்றுப் பதத்தை, அறியாமையால் சிலர் ஆகாரமாக்கிக் கொண்டனர். 'மங்கை' என்பதாவது 'மங்கா' என்பதாவது, வடமொழிச் சொல்லாயின், இவ் வறிஞர் கூற்று ஒப்பத்தக்கதேயாம். இவ்வுண்மையை எடுத்தோதியதும், அவர் விழித்துக்கொண்டு, 'இதற்குச் சீக்கிரம் சமாதானம் கூறுவோம்' எனக்கூறிச் சமாளித்துக்கொண்டு சென்றுவிட்டார். அவர் அறிந்ததையுணர்த்தியவுடன், நாமும் அதை யாவர்க்கும் உணர்த்துவோம். வடமொழி ஆகார ஈற்றுப்பதங்களே தமிழ்மொழியில் ஐகார ஈற்றுப்பதங்களாக உபயோகிக்கப்படுகின்றன. ஆனால், தமிழ் பேசுவோரிற் சில புலவர்களும்கூட, இவர்கள்மாதிரி தமிழில் உள்ள ஐகாரஈற்றுப் பதத்தை மட்டுமன்றி பிற பதங்களையும் ஆகார ஈற்றுப்பதமாக்கிக் கொள்ளுகின்றனர். உதாரணமாக, மாம் பழக்க விச்சிங்கநாவலர், 'பழனிபுரி'யைப் 'பழனுபுரி' என்கிறார்.

—பத்திராதிபர்.

MERCY.

[From '*The Merchant of Venice*' Act IV Scene I.]

The quality of mercy is not strained;
It droppeth, as the gentle rain from heaven
Upon the place beneath. It is twice blest:
It blesseth him that gives, and him that takes.
'Tis mightiest in the mightiest; it becomes
The throned monarch better than is crown:
His sceptre shows the force of temporal power,
The attribute to awe and majesty,
Wherein doth sit the dread and fear of kings;
But mercy is above this sceptred sway.
It is enthroned in the hearts of kings.
It is attribute to God himself;
And earthly power doth then show likest God's,
When mercy seasons justice. Therefore, Jew,
Though justice be thy plea, consider this—
That, in the course of justice, none of us
Should see salvation; We do pray for mercy;
And that same prayer doth teach us all to render
The deeds of mercy.

WILLIAM SHAKESPEARE.

விடுகதை வினா.

நான்கெழுத் தொருசொ லின்பேர். நவில் அதின் முதல் 'செய்யட்'பேர்,
ஒன்றதோர் முதலின் றேல் 'தேர்'. இரண்டதில் இன்றேல் 'தாள்' ஆம்.
ஆன்றமூன் றூஉ நின்றேல் அஃதொரு 'மாட்சி'ப் பெயராம்.
நான்குறித் தனசொல் யாதோ? நச்சினர்க் கினிய நல்லோய்!

தமிழ்ப் பண்டிதர்: செ. ரா. கணபதி சுப்ரமண்ய ஐயர்.

* இரக்கம்.

[இது ஷேக்ஸ்பியர் கவி இயற்றிய "Merchant of Venice" என்பதினின்றும் மொழி பெயர்க்கப்பட்டது.]

பிறர்வற் புறுத்தப் பிறந்திடல் என்றல்
இரக்கம் என்பதன் இயல்பா காது.
விண்ணி னின்றும் மண்மீ திழியும்
இனிய மழைஎன இழிவதிவ் இரக்கம்
இரண்டு விதத்தினும் ஈயும் இதுநலம்:
இரங்கப் படுவோன் இரங்குவோன் என்னும்
இருதிறத் தார்க்கும் ஈதருள் புரிந்திடும்.
வலிமிக் காரிடம் வலிமைமிக் குடையது.
அரியணை மீதமர் அரசனுக் கன்னவன்
புனைமுடி யினு(ம்)மிகப் பொருத்த முடையது.
அரசன் செங்கோல் அவனியில் அவனுடை
ஆணையின் ஆற்றலுக் கறிகுறி யாகும்.
பயமும் மாட்சியும் பயப்பதன் பண்பாம்.
அரசர்பால் திகிலும் அச்சமும் அதில்உறும்.
இரக்கம்இக் கோலினும் ஏற்றமிக் குடையது:
அரசர் மனச்சிங் காதனத் தமர்வது.
ஈசற் கேஅது இயைந்த ஓர்குணம்.
நீதியோ டிரக்கமும் நிகழ்வுறுங் காலையில்
மண்இறை ஆணையும் விண்இறை ஆணைஆம்.
ஆதலின், யூத! நீதியைப் பெறுவதே
நின்வழக் காயினும் நீ நினை இதனை:—
கேவலம் நியாயமே தேவன் கைக்கொளின்
நம்மவர் எவருமே நற்கதி காண்கிலம்.
இரங்கிமன் னிக்கநாம் ஈசனை வேண்டுவம்.
அதேவேண் டுகோள்நாம் அனைவரும் மற்றவர்க்
கிரக்கச் செயல்செய இனிதுகற் பிக்குமே.

ம. கோபாலகிருஷ்ணன்.

* இது இவ்வருடத்திய இன்டர்மீடியேட் மாணவர் வேண்டுகோட்கிணங்கி வெளியிடப்பட்டுள்ளது.

பண்டைத் தமிழரசர் ஆட்சிமுறை.

(315-ஆம் பக்கத்தொடர்ச்சி)

நாமறிந்த மட்டிலும் பின்வரும் உத்தியோகத்தினரும், உத்தியோகசாலைகளும், வளர்ந்ததாகத் தமிழ்க் காப்பியங்களினின்றும், அறிகிறோம்.

அரசர்க்கு அடுத்து நின்றோர் அமைச்சராவர். பிரபுக்களிலே ஒருசிலர் 'கிழார்' எனும் பட்டம் பூண்டோர் இவ்வேலையிலமர்தலும் உண்டு. இவருடன் கலந்தேமன்னவர் தம் ஒவ்வொரு காரியத்தையும் செய்ய முற்படுவர். இதன் உண்மை, 'சேரன் செங்குட்டுவன் தான் பத்தினிக் கடவுளைப் பேணுதல் விரும்பியும், அதுகூறல் முற்படாது தன்னமைச்சனை நோக்கினன்' என இளங்கோவடிகள் வருணித்துப் போனமையினின்றும் அறிதலாம். இந்தச் சந்தர்ப்பத்தை

"—இப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டுமென
மாலை வெண்குடை மன்னவன் விரும்பி
* நூலறி புலவரை நோக்க—" [சிலப். XXV *113—116*]

என வருணித்துச் செல்கின்றனர் அடிகள்.

மேலும் அரசரை அடுத்து நின்ற உத்தியோகத்தினர் ஏற்ற முறைமையை இரண்டு வேறிடங்களில்

"ஆசான் பெருங்கணி யருந்திற லமைச்சர்
தானைத் தலைவர் தம்மொடு குழீஇ" [சிலப். XXVI. *3—4.*]

எனவும்,

"ஆசான் பெருங்கணி யறக்களத் தந்தணர்
காவிதி மந்திரக் கணக்கர் தம்மொடு
கோயின் மாக்களுங் குறுந்தொடி மகளிரும்
....
காவிதி மந்திரக் கணக்கர் தம்மொடு

இவ்வடிகளே நமக்கறிவிக்கின்றனர்.

இவ் வமைச்சரை அடுத்து நின்றார் நாட்டு நியாயாதிபதிகள் இவர்கள் செம்மையையும் | தூய்மையையும், பின்வரும் மதுரைக் காஞ்சிச் செய்யுள் வரிகளால் உணர்க:—

* நூலறிபுலவர் = அமைச்சர்

"அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
ஞெமன்கோல் அன்ன செம்மைத் தாகிச்
சிறந்த கொள்கை அறங்கூர் அவையமும்
நறுஞ்சாந்து நீவிய கேழ்கிளர் அகலத்
தாவுதி மண்ணி அவிர்துகில் முடித்து
மாவிசும்பு வழங்கும் பெரியோர் போல
நன்றுந் தீதுங் கண்டாய்க் தடக்கி
அன்பும் அறனும் ஒழியாது காத்துப்
பழியொரீஇ உயர்ந்து பாய்புகழ் நிறைந்த
செம்மைசான்ற காவிதிமாக்களும்" [மதுரை 489-499]

இவர்கள் இறைவரித் திட்டத்தினின்றும் விலக்கப்பட்டவர் என்பர் மகாமகோபாத்தியாய ஸ்ரீ உ. வே. சுவாமிநாதையர் அவர்கள், சிலப்பதிகாரக் குறிப்புரையி னுள்.

இவரை யடுத்து நின்றார் சேனைபதியரும் அவர் தம் படையும் அரசன் வென்றிக்கும் பெரும்புகழ்க்கும் செல்வத்திற்கும் இவர் உபகரித்தலின், அரசன் எவ்வளவாகத் தம்படைவீரரைப் போற்றி வந்தான் என்பதைப் பற்றிக்கூறுவது மிகையேயாம். புறத்திணை இலக்கியம் முழுவதுமே இதற்குச் சான்று பகருவதாக இருக்கும்

பத்துப்பாட்டி னுள் நெடுநல்வாடையும், முல்லைப்பாட்டும் மன்னன் பாசறை நிலையை நன்கு வருணிக்கின்றன. இவர் இரவி னுந் துஞ்சாராய்ப் பன்னாட் சூழ்ந்து நிற்பதை,

"பன்னாட்
பகைவெம்மையிற் பாசறை மரீஇப்
பாடரி தியைந்த சிறுதுயி லியலாது
கோடுமுழங் கிமிழிசை யெடுப்பும்
பீடுகெழு செல்வ மரீஇய கண்ணே!" [பதிற்று.-50. (22-26)]

என்ற வடிகளும், இவர் பாசறையிலே விருந்தினர்க்கு வரையா தளித்த உணவின்மிகுதியை,

"உண்மின் கள்ளே! அடுமின் சோறே!
எறிக திற்றி! ஏற்றுமின் புழுக்கே!
வருநர்க்கு வரையாது பொலங்கலந் தெளிர்ப்ப
இருள்வண ரொலிவரும் புரியவி ழைம்பால்
ஏந்துகோட் டல்குல் முகிழ்நகை மடவரற்
கூந்தல் விறலியர் வழங்குக வடுப்பே!– [பதிற்று. 18. (1–6)

என்ற வடிகளும் நமக்குத் தெரிவிப்ப.

இவ்வரசர் ஒற்றர் தமைக்கொண்டு பிறநாட்டுச் செய்திகளையும் அறிந்து வந்தனர். செங்குட்டுவனது முக்கிய சாரனன சஞ்சயனுக்

குக் கீழாக "கஞ்சுக முதல்வர் ஈரைஞ் ஞாற்றுவர்" இருந்ததாக (சிலப் XXVI. 138) நாம் அறிகிறோம். 'அரசர் தமக்கு ஒற்றர் கருவிழிபோல்வர்' என அர்த்த சாத்திர நூல்யாவும் ஒருப்படக் கூறுமாயின், இவர் உபயோகத்தை நாம் ஒருவாறு அனுமானித்தறியலாமன்றோ?

இவரேயன்றி அரசனுக்குச் சொந்தப் பரிவாரகராகச் சில சேவகர் இருந்தனர். இவர்க்கு அரசன் கோயிலை யடுத்த வீதிகளிலே விடுதிகளமைக்கப்பட்டிருந்தன. இவரல்லாமற் காவலுக்கராக

"கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்" (சிலப் XIV. 66-67.) சிலரும் ஏற்பட்டிருந்தனர். இவ்யவனர் மிகவும் நம்பிக்கைக் குரித்தானவர்களாய் இருந்து, அரசர் மெய்காப்பாளராக—உடனிலைவீரராக—அமர்ந்திருந்தார் எனவும் நாமறிகிறோம். (முல்லைப்பாட்டு 60-70]

(இன்னும் வரும்)

ரா. வாசுதேவ சர்மா, M A; B L,
Lecturer in Sanskrit, National College, Trichinopoly.

புரட்டாசி மாத விடுகதை வினவுக்கு விடை.

நல்லவர்தங் கட்கறிவு நல்கு நச்சினார்க்கினிய!
வல்லவனற் கேசவரா மன்விடுத்த—சொல்லருநற்
பாவினு விற்குவிடை பாவலர்கள் போற்றுமெழிற்
'பாவநா சம்'தான் பகர்.

U. K. கிருஷ்ணசுவாமி,
5-வது பார மாணவன், ஸ்ரீசங்கர வித்யாசாலை, கொடுமுடி.

'நாசம்' உடன்' 'பாவம்' நவில் பா சம்'சவம்'சொன்
நாசமொழிக் கும்பாவ நாசம்தான்—மாசில்லாக்
கேசவரா மன்கேட்ட கேள்விக்குத் தக்கவிடை
போ! சடுதி யிற்போய்ப் புகல்

A. R. ஸ்ரீநிவாஸ முதலியார், ஆனைமலை.

பதின்மூன்றவது அத்தியாயம்.

நாவலன்,
The Novelist.

சென்ற அத்தியாய முடிவில் கைலாஸத்தோடு வந்தவனே 'விதியின் பயன்' எழுதிய 'சம்பந்தம்' என்ற சபாபதி. இவனுக்குச் சுமார் 22 வயதிருக்கலாம். அவன் எப். ஏ. பரிக்ஷை தேறி இப்பொழுது மதுரை ஜில்லா கோர்ட்டில் உத்தியோகமாயிருக்கிறான். மங்களபுரம் கிராம முன்சிபின் குமாரன் இவன். இவனைத் தகப்பனார் சட்டப் பரிக்ஷைக்குப் படிக்கும்படி எவ்வளவோ சொல்லியும் கேளாமல் ஸர்க்கார் வேலையில் நுழைந்தான். இயற்கையாகவே இவனுக்குத் தமிழில் அதிகப் பிரியம். வேலையொழிந்தபொழுது ஏதாவது ஆங்கில நாவல்களையும் தமிழ்ப் புத்தகங்களையும் வாசித்துக்கொண்டே யிருப்பான். சென்ற வருஷம் தமிழ்ச் சங்கத்தில் 'தங்க மெடல்' ஒன்று பரிசுபெற்றான். ஆனல் உலகில் தன்னைக்காட்டிலும் புத்திசாலிகளே ஒருவருமில்லை யென்ற அகம் பாவம் மாத்திரம் இவன் மனத்தில் குடிகொண்டிருந்தது. அதிலும் தான் எழுதிய தமிழ் நாவல் நாடெங்கும் புகழ்பெற்றிருக்கையில் சொல்லவும் வேண்டுமா!

நமது நாவலனும் கண்பரிருவரும் வீட்டினின்று புறப்பட்டுப் போய் உட்கார்ந்தார்கள். நீலவர்ணமான ஆகாய விதானத்தில் முத்துக்கள் சிதறினாற்போல நக்ஷத்திரங்கள் 'பளிச், பளிச்' என்று ஒவ்வொன்றாய்ப் பிரகாசிக்க ஆரம்பித்தன. பக்கத்தில் பாலத்தின்மேல் 'மடமட' வென்று சென்ற 'ஷட்டில்' வண்டித்தொடர், 'மணி 7 ஆயிற்று' என்பதைத் தெரிவித்தது.

சபாபதி:—"என்ன பார்த்தீர்களா! இவ்வளவு பெரியநதியில் தண்ணீர் மாத்திர மில்லை?"

கைலா:—(சிரித்துக்கொண்டு) "மழை பெய்தால்தானே?"?

சபா.—"மழையேது மண்ணேது இந்த அநியாயமும் அக்கிரமமும் உலகத்தில் பெருத்திருக்கையில்? காலை 9மணிக்குமேல் குழாயில் உத்தாணித் தண்ணீர் கிடையாது. மாலை 4மணிக்குத் திறக்கிறான். மறுபடி மாலை 6மணிக்கே அடைத்துவிடுகிறான்." என்று

மாண்டவன் மீண்ட மாயம்

பதினோராவது அத்தியாயம்.

சபதம்.
Determination.

மாலை, சுமார் 5-மணிக்கு மேலாயிற்று. அன்று ஞாயிற்றுக் கிழமையாதலால், கைலாஸம் அதுவரை நித்திரைசெய்து எழுந்து, தனக்காகத் தயாராய் வைத்திருந்த 'காபியை' எடுத்துக் குடிக்கப் போகுந் தருணத்தில், ராமஸ்வாமி, அயர்ந்த சரீரத்துடனும் நொந்த மனத்துடனும் உள்நுழைந்து கைலாஸத்தின் பக்கத்தில் போட்டிருந்த ஒரு நாற்காலியில் களைத்துச் சாய்ந்தான்.

கைலா:—"என்ன ராமஸ்வாமி! ஏதாவது கெட்ட சமாசாரமா என்ன? களைத்திருக்கிறாயே. இதைச்சாப்பிடு" என்று தன்கையிலிருந்த காபியை அவனிடம் கொடுத்துவிட்டு, தனக்கு வேறு கொண்டுவரச் சொன்னான்.

கைலா:—"நீ பாலாம்பாளைப் பார்த்தாயல்லவா?"

ராம:—"இரண்டு மணிநேரம் அவளோடு பேசிக்கொண்டிருந்தேன்."

கைலா:—"அப்படியானால் ஸமாசாரங்களெல்லாம் சொல்லியிருப்பாளே?"

ராம:—"ஆமாம், நான் உத்தேசித்ததினும் அதிகமாகவே சொன்னாள்."

கைலா:—"உன் பெற்றோரைப் பற்றித் தானே?"

ராம:—"ஆமாம்!"

தான் கேட்ட கேள்விகளுக்கு ராமஸ்வாமி மனப் பூர்வமாய்ப் பதில் சொல்லாமல் ஏதோ தள்ளிவிடப் பார்க்கிறான் என்று கைலாஸம் நினைத்து, "என்னப்பா! என்னிடம் சொல்லக்கூடாதென்றால் நான் கேட்கவில்லை." என்றான்.

ராம:—"உன்னிடம் சொல்லக்கூடாதது ஒன்றுமே இல்லை. நான் எல்லாம் சொல்லுகிறேன். எப்படிச் சொல்லுகிறதென்று தான் தோன்றவில்லை"

கைலா:—"அந்தக் கவலை யுனக்கு வேண்டாம். நான் கேட்கும் கேள்விகளுக்கு மாத்திரம் பதில் சொல்லிவா. முதலாவது பாலாம்பாள் என்பவள் யார்?"

ராம:—"என் தாயார்."

கைலா:—(திடுக்கிட்டு கையில் பிடித்திருந்த காபிப்பாத்திரத்தைக் கீழே நழுவவிட்டு) "என்ன! என்ன! உன் தாயார்? உண்மைதானா? அவள்தான் 86ஆம் வருஷமே மதுரையில் இறந்ததாகப் பத்திரிகைகள் கூறுகின்றனவே."

ராம:—"பத்திரிகைகள் கூறுகின்றன. ஆனால் அவள் சாகவில்லை. இறந்தவள் மாதிரி மூர்ச்சையாய்க் கிடந்தாள். பத்திரிகையில் இறந்ததாகவே வெளியாயிற்று. அதுமுதல் அவமானத்துக்குப் பயந்து அவள் தன் பெயரை மாற்றிக்கொண்டு இவ்வாறு தனிமையாய்க் காலங்கழித்து வருகிறாள்."

கைலா:—"சிதம்பரத்துக்கு இந்த சமாசாரம் தெரியுமா?"

ராம:—"அவர்கள் இருவரும் யோசித்துத்தான் இவ்விதம் ஏற்பாடு நடந்திருக்கிறது."

கைலா:—"அப்படியா? சிதம்பரத்தின் யுக்தியால்தான் இப்படியோ! சரிதான். சம்பந்தம் சொல்வது சரியாகவே இருக்கும் போலிருக்கிறது."

ராம:—"கைலாஸம்! அப்படிச் சொல்லாதே என் தாயாரைப்பற்றி—"

கைலா:—"மன்னிக்க வேண்டும்—ராமஸ்வாமி!—எனக்கு நீ சொல்வதின் அர்த்தம் விளங்கவில்லை—"

ராம:—"சற்றுநேரத்தில் எல்லாம் தெரியும் பார். என் தாயார் பட்ட கஷ்டமும் சிதம்பரஞ் செய்த உபகாரமும்——"

கைலாசம் சந்தேகத்துடன் 'சிதம்பரம்!—உபகாரம்!' என்று ஆச்சரியத்துடன் ராமஸ்வாமியின் கதையைக் கவனமாய்க் கேட்க ஆரம்பித்தான். ராமஸ்வாமியும் கதை முழுமையும் சொல்லி முடித்தான். கடைசிவரைப் பொறுமையாய்க் கேட்டுக் கொண்டிருந்த கைலாசம், சற்று யோசித்துவிட்டு, "என்ன! கட்டுக்கதையைப் பார்க்கிலும் உண்மைக் கதை அதிசயமாகவல்லவோ இருக்கின்றது. நாவலில் இறந்தவன் மனைவி உயிருடன் இருப்பதாகவே சம்பந்தம் சொல்லவில்லையே. நாம் எடுத்த விஷயம் வர வர அதிகக் கோளாறாகவல்லவோ ஏற்பட்டு வருகிறது?" என்றான்.

ராம:—"இருக்கட்டும். சிதம்பரத்தின்மேல் உள்ள சந்தேகமாவது தெளிந்தது—"

கைலா:—"எதனாலே?"

ராம:—"அவர்மீது இன்னும் சந்தேகமா? நாம் பேசிக்கொண்டிருக்கையில் சிதம்பரம் மனங்கலங்கினதாலும், பாலாம்பாளை நான் பார்க்கவேண்டாமென்று அவர் கூறியதாலும் போதும். அதற்குக் காரணந்தான் அறிவித்தேனே."

கைலா:—(யோசித்தவண்ணமாய்) "அதெல்லாம் சரிதான்—100-க்கு 99 பேர்கள் சிதம்பரத்தின்மேல் சந்தேகங் கொள்ளார்கள். ஆனால்—100-ஆவனான எனக்கு மாத்திரமா எடுத்ததற்கெல்லாம் அவர்பேரில் சந்தேகமிருக்கவேண்டும்? ஆ ஆ!—"

ராம:—"சிதம்பரத்தின்மீது சந்தேகம் நீ கொள்ள என்ன காரணமிருக்கலாம்?"

கைலா:—"என்னவோ இப்பொழுது எனக்குத் தெரியவில்லை. உண்மையைக் கண்டுபிடிக்காமலா போகப் போகிறோம்?"

ராம:—"நீ என்னவேண்டுமானாலும் நினைத்துக்கொள். என் தாயார் சொல்லியதைக் கேட்டபிறகு, சிதம்பரம் நல்லவரென்றும் யோக்யரென்றுந்தான் எனக்குத் தோன்றுகிறது."

கைலா:—"சரிதான். இந்த நிலைமையில் உனக்குத் தோன்றுவதுதான் சரி. நானாயிருந்தால், சிதம்பரத்துக்குத் தெரியாமலே இவ்வளவு காரியமும் நடத்தியிருப்பேன். சரி. போகட்டும்—இந்த விஷயத்தை யிப்படியே விட்டுவிடலாமா?"

ராம:—"ஒருநாளுமில்லை. எப்படியாவது கொலைசெய்தவனைக் கண்டுபிடிக்க வேண்டும்."

கைலா:—சற்று யோசித்து). "சரிதான்—சிதம்பரம் சொன்னபடி 'போனது போகட்டும்' என்று விட்டுவிடவேண்டியதுதான்"

ராம:—"கைலாஸம்! நீ சொல்லுவது எனக்கு விளங்கவில்லை. கொலையாளியை எப்படியாவது கண்டு பிடிக்கவேண்டுமென்று அவனுடன் சற்று நேரத்துக்கு முன் சொன்ன நீ, அதற்குள் உன் எண்ணத்தை மாற்றக் காரணமென்ன?"

கைலா:—"அது எவ்விதம் முடியப்போகிறது? கடலில் விழுந்த ஊசியைத் தேடுவது மாதிரிதானே—"

ராம:—"முயன்றால் என் முடியாது? 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்—'."

கைலா:-"பழமொழி சரியாகத்தானிருக்கிறது. இந்தஇருபது வருஷகாலமாய் முடியாததையா நாம் இப்பொழுது முடிக்கப் போகிறேும்?"

ராம:—"இதுவரை எவரும் முயற்சி செய்யவில்லை—ஆனுல் இது உண்மைக் காரணம் இல்லை. உனக்கு வேறே என்னவோ அதிருப்தி யேற்பட்டுவிட்டது. உன் மனதில் இருப்பதைத்தான் சொல்லேன்".

கைலாஸம் ஒன்றும் சொல்லமாட்டாமல் சற்று யோசித்துக் கொண்டே நின்றுன்.

ராம:—"இதைக்கண்டுபிடிக்க முடியாதென்ற அதைரியம் உனக்கில்லை. ஆனுல் அதைக் கண்டுபிடிப்பதால் வேறு விபரீதம் என்ன ஏற்படுமோ என்று பயப்படுகிறுய். அதுதானே?"

கைலா:—"அதையும் கவனிக்கவேண்டியது தானே?"

ராம:—"சிதம்பரமே குற்றவாளியென்றும், என் தாயார் உடந்தையாயிருந்தாளென்றும் ஏற்படுமென்று நினைக்கிறுயா? அப்படி யேற்படவே மாட்டாது. சிதம்பரம் அந்தக் காலத்தில் அவ்விடத்தில் இல்லையென்றும், என் தாயார்மேல் குற்றமே இல்லையென்றும் சங்கரன் மூலமாய் ருஜுவாயிருக்கிறது."

கைலா:—"இருக்கலாம். ஆனுல் யாராவது ஒருவர் குற்றம் செய்திருக்கவேண்டுமே?"

ராம:—"தர்மராஜு சீதையிடத்தில் போக்கு வரவு வைத்துக் கொண்டு இருந்திருக்கலாம். இதை அறியாது என் தகப்பனுர் வேறுவிதமாய் எண்ணியிருக்கலாம். அன்றிரவு கலகமுண்டாயிருக்கலாம். அவன் என் தகப்பனுரைக் குத்திவிட்டுத் தப்பி ஓடியிருக்கலாம். இதில் ஒன்றும் சந்தேகமில்லை. கொலை செய்தவன் தர்மராஜுதான். நீ சகாயம் செய்யாவிட்டாலும், நான் மாத்திரமாவது எப்படியேனும் கண்டுபிடிக்க முயல்கிறேன்".

கைலா:—"என் நீ மாத்திரம்? நானும் வேண்டிய உதவி செய்கிறேன். ராமஸ்வாமி! நான் என்ன சொன்னேன் இவ்வாறு நீ வருந்த? 'போனது போகட்டு' மென்றேன். எப்படியாவது கண்டு பிடித்துத் தான் தீரவேண்டுமென்று உனக்குத் தோன்றும் விஷயத்தில் நானும் வேண்டிய உதவி செய்யத் தயார். ஆனுல் இதைப் பார்க்கிலும் இன்னும் துக்ககரமான ஸமாசாரம் வெளியாகும் விஷயத்தில் என்னைச் சொல்லாதே."

ராம:—"சொல்வேன உன்னே?—அப்படி யாதொன்றும் ஏற்படவுமாட்டாது. சிதம்பரத்தின் மேலாவது, என் தாயார் மேலாவது கொஞ்சமேனும் குற்றமில்லை யென்பது நிச்சயம். நாம் வேண்டிய முயற்சி செய்வோம். என்ன வந்தாலும் சரியே."

கைலா:—"அப்படியானல் சரி. தமிழ்ச்சங்கத்துக்குப் புறப்பட்டுப்போய் 'இந்தச் சம்பந்தம் என்பவன் யார்?' என்று விசாரிப்போம்."

ராம:—"அதனுல் ஏதாவது பயனுண்டா?"

கைலா—"அது நிச்சயமாகச் சொல்லமுடியாது. பார்ப்போமே அதையும்"

பன்னிரண்டாவது அத்தியாயம்.

தமிழ்ச் சங்கம்.

The Tamil Sangam.

நமது நண்பர்களிருவரும் சுமார் 6 மணிக்குத் தமிழ்ச் சங்கம் வந்து சேர்ந்தார்கள். அஸ்தமிக்க இன்னும் இரண்டு நாழிகைப் பொழுதிருந்தது. ஆங்கு, சுமார் 40 வயதுள்ள ஒருவர், மூக்குக் கண்ணுடி அணிந்து, ஒரு பழைய ஓலை ஏட்டுப்பிரதியைக் கையில் பிடித்துப் பக்கத்தில் வைத்திருந்த எண்ணெயைத் தோய்த்து, அடிக்கடி அதில் தடவி, எழுத்துக்களைத் துலக்கி வாசித்துக்கொண்டும், தனக்குள் அடிக்கடி புன்சிரிப்புக்கொண்டு உத்ஸாகப்படுவதுமாயிருந்தார்.

கைலா:—"என்ன கவிராயரவர்களே! ஏது? மணி 6 ஆயிற்று. இன்னும் பழைய பிரதியைப் படித்துக்கொண்டிருக்கிறீர்களே?"

கவி:—"கைலாசம்! வருக! வருக! ஆங்கோர் ஆதனத்தின் கண் அமர்க. (ராமஸ்வாமியைச்சுட்டி) அன்னவர் யாரோ? தமியேன் அறிதல் தகுமோ?"

கைலா:—"இவர்கள், பெல்வாடாவில் ஸூபர்வைஸர் உத்தியோகம் வகிக்கிறுர்கள்.—"

கவி.—"அப்படியா? மெத்த சந்தோஷம். இப்பிரதியைப் பற்றித் தாம் வினவினீர் அல்லீரா? இஃது யாழ்பாணத்துச் சுந்தர கவிராயரவர்க ளனுப்பியதோர் ஏட்டுப்பிரதி. எத்தனை யுகங்கள்

ஆயினவோ அறிகிலேன். செந்தமிழ்ப் பெருங்காப்பியங்களில்ஆருவ தாகக் கூறலாம். சொல்நடை, பொருளமைப்பெல்லாம் வெகு அழகாக அமைந்துள்ளன. இச்செய்யுட்கள் க்ஷமணரைப் பற்றி யே பெரும்பாலும் கூறுகின்றன. ஒரு செய்யுள் வாசிக்கின்றேன் கேட்கலாமோ?''

கைலா:—'' விதியின் பயன் என்ற 'நாவல்' இந்த அச்சாபீ சில்தானே பதிப்பிக்கப்பட்டது? அதை எழுதிய சம்பந்தம் என்பவன் யார்?''

கவி:—''ஓஹோ! இப்பொழுதுதான் ஞாபகம் வந்தது. 'நாவல்' என்ற இந்த ஆங்கிலேயச் சொல்லுக்குச் சரியான செந்தமிழ்ச்சொல் எவ்வளவோ தேடிப்பார்க்கினும் கிடைத்தலரிதா யிருக்கின்றது. தங்களுக்குத் தெரிய வருமோ?''

கைலா:—''எனக்குத் தமிழே தெரியாது கவிராயரே. நான் பி. ஏ. முடிய ஸம்ஸ்கிருதம் எடுத்துக்கொண்டவன்.''

கவி:—''ஓஹோ! வடமொழி பயின்றவர்களோ? ஹ! ஹ!! வடமொழியினின்றுதான் செந்தமிழ் உண்டானதென்றும், செந்தமிழின்கண்ணுள்ள இனிய சொற்களெலாம் வடமொழியினின்று வந்தனவென்றும் கூறத்துணிகிறீர்க ளல்லவா நீங்கள்!''

கைலா:—(தனக்குள்) ஏதடா? என்னகாரியமாய் வந்தோம் குஸ்திக்கு வருகிறார் இந்த மனுஷ்யன் (வெளிப்படையாய்) ''அஃ திருக்கட்டும். இந்தச் சம்பந்தம்—''

கவி:—'ஓஹோ! மறந்தல்லவோ போயினேன்! இம் மாணவன் பிரவேச பரீக்ஷை தேறி உயர்தர வகுப்பிற் கல்வி பயில்கின்ருன்.—ஸபாபதி என்பவன்''

கைலா—''ஸபாபதி இருக்கட்டுமையா. சம்பந்தம்?''

கவி:—''அவசரப்படாதீர். இம்மாணவன் செந்தமிழில் சிறந்ததோர் பண்டிதனுகத் தக்கவன். 'விளையும்பயிர் முளையிலே தெரியு'மென்று சான்ருேர் கூறிப் போந்தவாறு—''

கைலா:—''அதிருக்கட்டுமையா! சம்பந்தம் யார் என்ருல்-''

கவி:—''சற்றுப் பொறுத்தருள! இவன் செந்தமிழில் நல்வாக்கு வாய்ந்தவனென்று அக்கிராசனாதிபதி யவர்கள், மன முவந்து, பொற் பதக்கமொன்று சென்ற ஆண்டின் இறுதியில் பரிசளித்தார்.''

கைலா:—"என்ன ஐயா! சம்பந்தம் யார் என்றால்—"

ராம:—(பொறுமையற்றவனாய்) "இதென்னடா! இதற்கு முடிவு கிடையாது. மேலாகவேண்டிய காரியத்தைப்பார்" என்று கைலாசத்துக்கு ஜாடையாய்ச் சொன்னான்.

கவி:—(அதையறிந்து) "தமது நண்பருக்கு அவசரம் போலும். சரி! வேறு விசேடமுண்டோ?"

கைலா:—"என் வினாவிற்கு விடையில்லையே"

கவி:—"இந்தச் சபாபதி ஒரு தமிழ் நாவல் எழுதியிருக்கின்றான்—"

ராம:—"இதற்கு முடிவு கிடையாது கைலாஸம்" என்று ரகஸ்யமாய்ச் சொன்னான்.

கைலா:—"என்ன கவிராயர் அவர்களே! சம்பந்தத்தின் நாவலைப்பற்றி கேட்டால்—"

கவி:—"சம்பந்தம் என்ற மாணவனே கிடையாது இங்கே"

கைலா:—(பொறுமையிழந்தவனாய்) "என்ன, ஐயா! இதை அப்பொழுதே சொல்லித் தொலைக்கலாகாதா?"

கவி:—"அல்ல அல்ல. இந்தச் சபாபதியே 'சம்பந்தம்' என்ற பேர் பூண்டு இந்த நாவல் வரைந்தவன். வக்கீல் சிதம்பரமும் அவனைப்பற்றித்தான் சற்று முன்னரே விசாரிக்கலானார்."

கைலாஸமும் ராமஸ்வாமியும் திடுக்கிட்டார்கள். இதற்குள் சிதம்பரமும் அவ்வறைக்குள் நுழைந்தார். கைலாஸம் அவரைக் கவனியாமல் வேறே காரியம் பார்ப்பவன்போல் அடுத்த அறைக்குச் சென்றான்.

சிதம்:—"ராமஸ்வாமி! ஏது நம் வீட்டுக்கு வரவில்லை கடிதமனுப்பியும்?"

ராம:—"நாளை அவசியம் வருகிறேன். அதற்குள் ஒரு அவசர காரியமாய்க் கைலாஸம் அழைத்து வந்துவிட்டான்."

சிதம்:—"சரி. ஏதாவது விசேஷ முண்டா?"

ராம:—"பாலாம்பாளைப் பார்த்தேன்!"

சிதம்:—"கொலை செய்தவன் யாரென்று—ஏதாவது—அவள் சொன்னாளோ?"

ராம:—"இல்லை—ஆனால், தான் இன்னாரென்று மாத்திரம் தெரிவித்தாள்."

சிதம்:—"பாலாம்பாள் என்று தானே?"

ராம:—"இல்லை! என் தாயார் ஜானகியம்மாள் என்று"

சிதம்:—"அப்படியா? கடைசியாய்ச் சொல்லியேவிட்டாளா?"

ராம:—"எல்லாம் அறிந்துகொண்டேன்.—அவள் முன்பு கேஸ் நடந்த காலத்தில் எதற்காக மூர்ச்சை போனதுபோல் பாவனை செய்தாளென்பதும், தாங்கள் அவளுக்கும் எனக்கும் செய்த உபகாரமும், எல்லாம் தெரிந்தது—"

சிதம்:—(தனக்குள்) "கவலை விட்டதப்பா!" (வெளிப்படையாய்) "அப்பா! உன் தகப்பனும் நானுமிருந்த சிநேகத்துக்கு, உங்களிருவருக்கும் நான் செய்தது ஒரு பெரியகாரியமல்ல. உண்மையை உனக்கு வெளியிடாமலிருந்ததற்குக் காரணம் இப்போது தெரிந்ததல்லவா? உனக்கு ஏன் கவலையுண்டுபண்ண வேண்டுமென்பது தான் என் எண்ணம். என்ன செய்வது? உன் தாயார் ஒரே பிடிவாதமாய்ச் சொன்னாள். உடனே கட்டை எடுத்து உன் கையில் கொடுத்தேன். சரி, இனிமேல் என்ன செய்வதாய் உத்தேசம்? கொலையாளியைப்பற்றி ஏதாவது துப்புக் கிடைத்ததா?"

ராம—"இல்லையே. எல்லாம் கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல்தான் இருக்கிறது."

சிதம்:—"பின்னை விட்டுத்தொலையேன் இந்த ஸமாசாரத்தை."

ராம:—"தொலைக்க முடியுமா? அவ்வாறு செய்ய ஒருநாளும் மனம் வராது. எப்படியாவது இதையும் கண்டுபிடித்து என் தாயார் பேரிலுள்ள அபவாதத்தையும் விலக்கி முன்போல அவள்—"

சிதம்:—"இவ்வளவு காலத்துக்குப் பிறகா?"

ராம:—"எவ்வளவு காலமானால்தான் என்ன?"

சிதம்:—"என்னவோ நீ எடுத்தகாரியம் கைகூடினால்எனக்குச் சந்தோஷந்தான். விட்டுத்தொலைப்பது நல்லது. உன் இஷ்டம். வருஷம் இருபது ஆயிற்று. என்னாலாவது உன் தாயாராலாவது, இதற்குமேல் உனக்குத் தெரிவிக்கக்கூடிய தொன்றுமில்லை."

இதற்குள் கைலாஸம் மற்றொரு பையனோடு உள்ளே நுழையவே, சிதம்பரம், "சரி, போய்வருகிறேன்" என்று விடைபெற்று வெளியே சென்றார்.

பதினைந்தாவது அத்தியாயம்.

சிதம்பரமும் இராமஸ்வாமியும்.

Chidambaram & Ramasamy.

சிதம்:—"விதியின் பயனை வாசிக்க வாசிக்க எனக்கு ஸம்பமா யிருக்கிறது. மேலும், அந்தச் சம்பந்தம் என்பவனை நேரிலே பார்த்தது முதல்—"

ராம:—(ஆச்சரியத்துடன் தனக்குள்) "என்னடா! இந்தக் கைலா ஸத்துக்கு ஆருடமேதாவது தெரியுமா! யக்ஷிணி உபாஸனை உண்டா! அவன் சொல்வதெல்லாம் தவறாமல் நடக்கிறதே. முதல் முதல் சம்பந்தத்தின் பேச்சை இவரே எடுத்துவிட்டார்" (வெளிப் படையாய்) "சம்பந்தம் எப்படிப்பட்டவன்?"

சிதம்:—(புன்னகையுடன்) "அவன் சிறுபிள்ளை. கெட்டிக்காரன். அதுதான் அவன் பெயரோ?"

ராம:—"அவன் பெயர் ஸபாபதி யாம். மங்களபுரம் கிராம முனிசிப் குமாரனும்!"

சிதம்:—"அப்படியா? நீங்களிருவரும் நாளையதினம் மங்கள புரம் போகிறீர்களோ?"

ராம:—"ஆமாம்."

சிதம்:—"அப்படியானால் சபாபதிக்குக் கொலை நடந்த் விருத் தாந்தத்தைச் சொன்னவரை அறிந்துவிடலாம்."

ராம:—"எனக்குத் தெரிந்தமட்டில் சங்கரி என்பவள்தான் சொல்லியிருக்கிறாள்."

சிதம்:—"அவள் யார்?"

ராம:—"அவள் ஒரு படித்த பெண்ணும். இதெல்லாம் சபா பதி உங்களிடம் சொல்லவில்லையோ?"

சிதம்:—"ச்ஸ்—என்னவோ சொன்னான். கதை விஷயம் எல்லாம் உண்மையாய் நடந்ததுதானென்று. வேறே ஒன்றும் சொல்லவில்லை. அந்தப்பெண்ணைப் பார்க்கப் போகிறீர்களல்லவா?"

ராம:—"ஆமாம்! சமாசாரமெல்லாம் அவளுக்கு எவ்விதம் தெரிந்ததென்று விசாரிக்கவேண்டும். பிறகு—"

சொல்லிவிட்டு எழுந்து சற்றுநேரம் இவர்களைப்பிரிந்து சென்றிருக்கையில்;

ராம:—"இவனைக் கட்டியழுகிறாயே. இவனிடத்திலிருந்து நமக்கு என்ன தெரியப்போகிறது?"

கைலா:—"எல்லாம் பாரேன். அவனுக்கு 'நான்' என்ற அகம்பாவம் உண்டு. ஒரு சுருதியைத் தூக்கி வைத்தால் எல்லாவற்றையும் கக்கிவிடுவான். சுத்த மண்டு இந்தப்பயல். இவன் இந்த நாவல் எழுதினான் என்பது எனக்கு ஆச்சரியமாகவேயிருக்கிறது."

ராம.—"ஏன்? நாவல் நன்றாயிருக்கிற தல்லவா!"

கைலா:—"அதனால்தானே இவன் எழுதியிருக்கமாட்டான் என்ற சந்தேகம். ஒருவேளை சங்கரி என்ற அந்தக் குட்டியின் உதவி ஜாஸ்தியாக இருந்திருக்கவேண்டும்——"

ராம:—"சங்கரி யார்!"

இதற்குள் வெளிச்சென்றிருந்த சபாபதியும் வந்துசேர்ந்தான்.

கைலா:—"என்ன சபாபதி! நீ நாவல் எழுதிய பெருமை உன் தகப்பனாருக்குத் தெரியாதோ?"

சபா:—"தெரியாது. அவருக்கு இதெல்லாம் பிடிக்காது. அவர் என்னைச் சட்டம் வாசிக்கச் சொன்னார். அவரைத் திருப்தி செய்ய என்னால் முடியவில்லை—"

கைலா:—"ஆகையால் சங்கரியைத் திருப்தி செய்ய இந்த நாவல் எழுதினையாக்கும்!"

சபாபதி பேச்சில் அவ்வளவு சாமர்த்திய மில்லாதவனாதலால் பதில் சொல்ல முடியாமல் தியங்கினான்.

ராம:—"இந்தக் கதை கட்டுவதற்கு உனக்கு வெரு சிரமம் ஏற்பட்டிருக்கும்."

சபா:—"ச்ஸ்! ஆ! இது என்ன பிரமாதம்! எத்தனையோ கதை. இதெல்லாம் எனக்குத் தண்ணீர் பட்ட பாடு."

கைலா:—"சங்கரியும் நீயும் சேர்ந்துதான் இந்தக்கதை கட்டினீர்களோ?"

சபா:—(அலட்சியமாய்) "அவளுக்கென்ன தெரியும்! ஆனால் அவளிடத்தில் அடிக்கடி நான் இதைப்பற்றிச் சொல்லி இருக்கிறேன்."

கைலா:—"ஆனல் இந்தக்கதை அவளுக்கே புதிதுதானே?"

கேவலம் ஒரு பெண்பிள்ளை நாவலுக்கு வேண்டிய சமாசாரங்களைத் தன்னிலும் அதிகமாக அறிந்ததாகச் சொல்லின், அது தனக்குக் கௌரவக் குறைவென்றும், தான் அடைந்த கீர்த்திக்கு ஹானியாகும் என்றும், நமது நாவலன் உணர்ந்தான்.

சபா:—"அவள் ஏதோ சில சமாசாரஞ் சொன்னாள். அதைக் கொண்டு இந்தக் கதையைக் கட்டினேன்."

ராம:—"அன்றைக்கோர் பத்திரிகையில் பார்த்தேன். அதில் 'உன் நாவலில் சொல்லியபடி உலகத்தில் நடந்திருக்கக்கூடியதல்ல' என்று எழுதியிருந்ததே."

சபா:—"அப்படியும் சிலர் உளறுகிறார்கள். (கையைச் சொடக்கிக் கொண்டே) இந்த க்ஷணத்தில், வேண்டுமானால், அவ்வளவையும் நடந்ததென்று ருஜுப்படுத்தி விடுவேனே."

ராம:—"ஆனல் இதெல்லாம் உண்மையாய் நடந்ததா?"

சபா:—"ஆமாம். ஏதோ ஒரு கொலை நடந்ததாக அதன் விருத்தாந்தத்தைச் சங்கரி சொன்னாள். அதை வைத்து இந்தக் கதையை கட்டினேன்."

கைலா:—"சங்கரியா சொன்னாள்? அவளுக்கு எவ்விதம் தெரிந்தது."

சபா:—"அது எனக்குத் தெரியாது. அவள் சொல்லவுமில்லை. அவள் சொன்ன கேஸ் நன்றாய் நாவல் எழுதலாம்போலிருந்தது."

கைலா:—"சரி. உன் நாவல் சமாசாரம் நடந்திருக்கக்கூடாத விஷயம் என்று எழுதியிருக்கிறதே. இவ்வாறு எழுதிய அதே பத்திரிகையில் நீயேன் மறுப்பெழுதக்கூடாது!"

சபா:—"நான் எழுதாவிடினும் அதைப்பற்றிக் கேட்ட பேருக்கு எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறேன். இப்போது சற்றுமுன்கூட ஒரு வக்கீல் கிழவர் வந்தார். அவரும் ராமஸ்வாமி சொன்னதுபோலத்தான் சொன்னார். அவருக்கும் இதேமாதிரி தான் பதில் சொன்னேன். திருப்தி யடைந்து என்னைப் புகழ்ந்து சென்றார்."

ராமஸ்வாமியும் கைலாசமும் திடுக்கிட்டு ஆச்சரியத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

ராம:—"சிதம்பரம் உன்னோடு பேசிக்கொண்டிருந்தாரா?"

சபா:—"சிதம்பரமா!—ஓகோ!—நானுமப்படித்தான் நினைத்

தேன்; சிவப்பாய், கெட்டையாய், 45, 50 வயதிருக்கலாம். அவர் அதிக ஆவலுடன் என் நாவலைப்பற்றி விசாரித்தார்."

ராம:—"உனக்கு வக்கீலைக் கண்டால் பிடியாதோ!"

சபா:—"எதனால் அப்படிச் சொல்லுகிறீர்கள்!"

ராம:—"பாவம்! துரைசாமி—அதாவது சிதம்பரத்தின்மீது பழியைப் போட்டிருக்கிருயே."

சபா:—"சாதாரணமாய்க் கதையை எப்படியாவது முடிக்க வேண்டுமல்லவா? சுந்தரமே செய்திருப்பானென்று சங்கரி சொன்னுள். துரைசாமிமேல் சந்தேகமே இல்லை. நானுகவே கதையைக் கட்டினேன். சந்தேகமே இல்லாதவன்மேல் குற்றம் கற்பித்தால் தானே கதை ஸ்வாரஸ்யப்படும்!"

கைலா:—"சுந்தரந்தானே தர்மராஜு? வாஸ்தவமாய்க் கொலை செய்தது யார்!"

சபா:—" அது யாருக்கு தெரியும்? இந்தக் கதையைக்கேட்க எனக்கே அதிசயமாயிருக்கிறது. வேடிக்கையாய் என்னிஷ்டப் படி ஒருவிதமாய் முடித்தேன்."

ராம:—"மூன்ரும்பாகத்தில் ஏதோ பொடி டப்பி அகப்பட்டதாகச்சொல்லி, அதைக்கொண்டு, துரைசாமி பேரில் கொலையைக் கற்பிக்கிருயே? அதுவும் கட்டுமானந்தானு? அல்லது உண்மையா?"

சபா:—"கட்டுமானமா!—சங்கரி எனக்குச் சொன்னுள் வேடிக்கையாயிருந்தது. அந்த வைத்துக்கொண்டு கதையை மேல் வளர்த்தேன்."

'ஒருவேளை பொடிடப்பி சிதம்பரத்தைச் சேர்ந்ததாயிருத்தல் கூடும்' என்று சற்று யோசித்துச் சம்பாஷணையை முடித்துவிட எண்ணி 'ரொம்ப நன்ருய் இருக்கிறது உன் நாவல்' என்ருன் கைலாஸம். பிறகு மூவரும் எழுந்தார்கள். சபாபதி விடை பெற்றுப் பிரிந்தான்.

ராம:—"கடைசியில் என்னப்பா அறிந்தாய் புதிதாய்!—"

கைலா:—"ஏன்? சங்கரி மூலமாய்ச் சபாபதி இந்த விஷயத்தை அறிந்தான். சிதம்பரத்துக்கு இந்த விஷயம் தெரிந்துவிட்டது என்பதுதான்."

ராம:—"அதனல் என்ன?"

கைலா:—"அவர் பாலம்பாளைக் கலைத்ததுபோலச் சங்கரியையும் கலைக்கப்போகிருர்."

பதினுன்காவது அத்தியாயம்.

முன்யோசனை.

Pre-consideration.

கைலா:—"சிதம்பரம் கூடிய சிக்கிரத்தில் மங்களபுரம் போவார் பார்."

ராம:—"எதற்காக?"

கைலா:—"அவர் நேற்றிவு ஸபாபதியின்மூலம் அவன் இந்தக் கொலை விஷயமறிந்த செய்தியை அறிந்திருக்கிறார். இனி அவர் மங்களபுரஞ்சென்று சங்கரி நமக்கு ஒன்றும் சொல்லாதபடி தடுக்கும் பொருட்டே அங்குப் போவார். ராமஸ்வாமி! உனக்கு இன்னும் அவர் சுபாவம் தெரியவில்லையே."

ராம:—"சிதம்பரத்தின் செய்தி இருக்கட்டும். புதிதாக வந்து சேர்ந்த இந்தச் சங்கரி என்பவள் யார்?"

கைலா:—"மங்களபுரத்திலிருந்து அரைமைல் தூரத்தில் ஒரு மடமுளது. அதில் 'சம்பு' என்று ஒருவர் பரதேசி மாதிரி எப்பொழுதும் அம் மடத்துக்குள்ளேயே இருக்கிறார். அவருடைய பெண்ணே சங்கரி என்பவள்."

ராம:—"அவரை உனக்குத் தெரியுமோ?"

கைலா:—"தெரியும். அவர் அவ்வளவாக வெளியே வருவது கிடையாது. எப்போது பார்த்தாலும் பூஜையும் வேதாந்த பாராயணமுமா யிருப்பார். ஆனால் அந்த மனுஷ்யன் முகத்தில் சந்தோஷமே கிடையாது."

ராம:—"சங்கரி அவனுடன்தா னிருக்கின்றளோ?—"

கைலா:—"ஆமாம். அவள் அதிக புத்திசாலி. தகப்பனுரே அவளைத் தம்கூட வைத்துக்கொண்டு எல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கிறார். இந்த காவல்கூட இந்த அசடு ஸபாபதி எழுதியிருக்க மாட்டான். அநேகமாய் அந்தக் குட்டிதான் எழுதி யிருப்பாள்."

ராம:—"பெண் என்ருல் அவ்வளவு உயர்வா உனக்கு? மற்றும் எடுத்ததற்கெல்லாம் சந்தேகமா உனக்கு?"

கைலா:—"பெண்கள் என்ற மாத்திரத்திலேயே அவர்களைப் புகழ்ந்து பேசுவது என்பது என் ஜாதகத்துக்குக் கிடையாது. என் மனதில் உண்மையென்று தோன்றுவதைச் சொன்னேன்!"

ராம:—"சரி. இப்பொழுது என்ன செய்யலாமென்று நினைக்கிருய்?"

கைலா:—"எப்படியாவது அந்தச் சங்கரியைக் கண்டு விசாரிக்கவேண்டும். ஆனல் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். அந்தக் குட்டி புத்திசாலி. நாம் வந்த விஷயத்தை நுட்பமாய் அறிந்துவிடுவாள்."

ராம:—"அந்த மடத்தில் சம்புவோடு, சங்கரி தவிர வேறு யாரெல்லா மிருக்கிருர்கள்? அவர் ஸம்ஸாரம்—"

கைலா:—"அவர் மங்களபுரத்திற்கு வருமுன்னமேயே அவரது மனைவி இறந்துவிட்டாளாம். பலராமன் என்ற ஒரு பரிசாரகன்தான் கூட இருக்கிருன். அவனுக்கு 50, 55 வயதிருக்கும்."

ராம:—"பெயர் வேடிக்கையாய் இருக்கிறதே! இதுமாதிரிப் பெயர் இதுவரை நம் நாட்டில் ஒருவரும் வைத்துக்கொள்ளவில்லையே!"

கைலா:—"அதனல் என்ன?"

ராம:—"உண்மைப் பெயரை மறைத்து இந்தப் பெயர் வைத்துக்கொண்டிருக்கலாமோ, என்றுதான் சொன்னேன்."

கைலா:—"நான் சிதம்பரத்தின்மேலே சந்தேகப்படுகிறேன் என்ருயே! முன்பின்தெரியாத பலராமனைப்பற்றி ஏன் உனக்கு இவ்வளவு சந்தேகம்!"

இதற்குள் கீழேயிருந்த குமாஸ்தா ஒரு கடிதம் கொண்டுவந்து கொடுக்க அது சிதம்பரம் அனுப்பிய கடிதமாயிருந்தது. அதில்

"அன்புள்ள ராமஸ்வாமிக்கு,

"நானும் உன் அம்மாமியும் நாளைக் காலை கொடைக்கானலுக்குப் புறப்படுகிருேம். நீ இன்று அவசியம் என்

வீட்டுக்குவந்து போகவேண்டும். உன் முயற்சி எந்த மட்டில் இருக்கிறதென்றும் தெரிவிக்கவேண்டும்.

உன் அன்புள்ள,

சிதம்பரம்."

என்று எழுதியிருந்தது. இதை வாசித்தபிறகு, ராமஸ்வாமி, "கைலாஸம்! என்ன ஆலோசிக்கிறாய்!" என்றான்.

கைலா:—"சிதம்பரம் காலை மங்களபுரம் போகிறார் என்று தெரிகிறது—சங்கரியைப் பார்த்துப்பேச—"

ராம:—"கொடைக்கானலுக்குப் போவதாய் எழுதியிருக்கிறார். நீ என்ன இப்படிச் சொல்லுகிறாய்!"

கைலா:—"அவர் என்ன அவ்வளவு அசடா உன்னைப் போல் உள்ளதை உளற?"

ராம:—"என்னை வரச்சொல்லி யிருக்கிறாரே!—"

கைலா:—"நீ போகத்தான்வேண்டும். போய் அங்கேயுள்ள சமாசாரங்களைத் தெரிந்துகொள். ஆனால் அசட்டுத்தனமாய் நாம் உத்தேசிக்கிற சமாசாரங்களைமாத்திரம் வெளியிடாதே. சிதம்பரம் அதிக வஞ்சகஸ்தர்."

ராம:—"ஆனால் என் தாயாரைப்பார்த்து, இந்தச் சம்பந்தத்தின் சமாசாரம் எல்லாம் சொல்லவேண்டுமென் றிருக்கிறேனே!"

கைலா:—"அது நான் சொல்லிக் கொள்ளுகிறேன்."

ராம:—"நீயா?"

கைலா:—"ஆமாம்! ராமஸ்வாமி! இன்னும் உனக்குச் சிதம்பரத்தின் மேலுள்ள நம்பிக்கை போகவில்லை. அவர் நம் முயற்சியைக் கெடுக்கவே முயல்கிறார். நாம் மங்களபுரம் போகுமுன், தாம் சென்று சங்கரியைப் பார்த்து வேண்டிய ஏற்பாடு செய்ய விரும்புகிறார். நாம் அதற்குத் தகுந்தபடி முன்னதாகவே செல்லவேண்டும். ஆகையால் நீ சிதம்பரம் வீட்டுக்குப்போய்ச் சீக்கிரம் வா."

ராம:—"அப்படியானால் நீ என் தாயாரிடம் செல்லுகிறாயா?"

கைலா:—"என்னவோ அவளைப் பார்க்கவேண்டுமென்று ஆவல் எனக்கு."

ராம:—"ஒருவேளை அவள்மேலும் சந்தேகமோ?"

கைலா:—"எனக்கு அந்தச் சிதம்பரம் இருவர் தவிர மற்றவர்கள் மேலே சந்தேகமே இல்லை. ஒருவேளை நான் பேசிக்கொண்டிருக்கையில், தன்னை அறியாமல் உன் தாயார் ஏதாவது சொல்லிவிட்டால், அதைக்கொண்டு மேலே—"

ராம:—"சரி நீ அவளிடம் செல். நான் சிதம்பரம் வீடுபோய் வருகிறேன்."

கைலா:—"சரி. நீ சென்று சிதம்பரம் என்ன சொல்லுகிருர், செய்யப்போகிருர் என்ற ரகஸ்யத்தை அறிந்துவரவேண்டியது. நீ மாத்திரம் வாய்திறந்து அவரிடம் ஒன்றும் சொல்லிவிடாதே!"

ராம:—"நீயும் கூடவந்து அவரைப் பாரேன்!"

கைலா:—(சிரித்துக்கொண்டு) "அவரை நாளைக்குப் பார்க்கிறேன் மங்களபுரத்தில். அதற்குள் உன் தாயார் சொல்லுவதையும் அறிந்து வருகிறேன். அவரிடம் ஒன்றும் உளறி வைக்காதே. நாம் நாளை மங்களபுரம் போகிறோமென்று தெரிவித்திடாதே. சம்பந்தம் பேச்சையும் எடாதே. அவரே முதல் முதல் சம்பந்தம் பேச்செடுப்பார். இன்னொரு விஷயம்: பொடி டப்பி ஸமாசாரமும் சொல்லிவிடாதே!"

ராம:—"ஏன்?"

கைலா:—"ஸபாபதிக்கு பொடிடப்பி சமாசாரம் சொன்னவள் சங்கரி. பத்திரிகைகளில் பொடி டப்பி சமாச்சாரமே கிடையாது. ஆகையால் அதன் ரகஸ்யம்—"

ராம:—"பொடி டப்பி சமாச்சாரம் கட்மோனம்!"

கைலா:—"அதுதான் வாஸ்தவம்."

ராம:—"ஆனல் சங்கரிக்கு எவ்விதம் தெரிந்திருக்கலாம்?"

கைலா:—"அதிலேதான் இருக்கிறது ஸூக்ஷ்மம். சங்கரிக்கு பொடி டப்பி விஷயம் சொன்னவர்களைக் கண்டுபிடித்துவிட்டால் உன் தகப்பனைக் கொன்றவனைக் கண்டுபிடித்தாயிற்று என்று நிச்சயமாய் நினைத்துக்கொள்."

R. S. நாராயணசாமி ஐயர், B. A. B. L.

சிதம்:—"பூ! இவ்வளவு தானா? பத்திரிகையில் வாசித்திருப்பாள்."

ராம:—"அது எப்படி இருத்தல்கூடும்? அந்தக் காலத்துப் பத்திரிகைகள் இப்பொழுது எவ்விதம் கிடைத்திருக்கும்?"

சிதம்:—"ஒருவேளை இவளும் அந்தக் கொலை சமயத்திலிருந்திருக்கலாம்—ஆனால்—அவளுக்கு வயது என்ன இருக்கும்?—"

ராம:—"18, 19 வயதிருக்கலாம்."

சிதம்:—"ச்ஸ்—! உன் தகப்பனார் இறந்தே இருபது வருஷமாகிறதே. அவளுக்கென்ன தெரியப்போகிறது?—"

ராம:—"அப்படியானால் சபாபதிக்கு எல்லாவிஷயமும் அவள்தானே சொல்லி இருக்கிறாள்."

சிதம்:—"பத்திரிகைகளில் படித்திருப்பாள்."

ராம:—"பத்திரிகைகளில் காணப்படாத விஷயமும் சொல்லியிருக்கிறாளே!"

சிதம்:—(சஞ்சலத்துடன்) "அது எவ்விதம் தெரியும்?"

ராம:—"நாவலின் மூன்றாம் பாகத்தில்—"

சிதம்:—"பைத்தியம்! வாஸ்தவமாய் நடந்ததற்கும், நாவலில் சொல்லியிருப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கின்றது. உன் தகப்பனாரைக் கொன்றவனோ இன்னார் என்று தெரியவில்லை. நாவலை எப்படியாவது பூர்த்திசெய்யவேண்டும். அதற்காகத் தன் இஷ்டப்படி சம்பந்தம் எழுதியிருக்கிறான். நீயே பார்! துரைசாமி என்பது என்னைக் குறிக்கின்றது. ஒரு விதத்திலாவது அவனுக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லை. விசாரணைகாலத்தில் நான் சாக்ஷி சொல்லி இருக்கிறேன். நான் உன் தகப்பனாருக்குப் பிராண சிநேகன். 'ஒருவன் தன் நண்பனுடைய மனைவிமேல் காதல்கொண்டு அவனைக் கொன்றான்' என்று கதை முடிந்தால், அது ஸ்வாரஸ்யமாயிருக்குமென்று, அவன் துரைசாமிமேல் பழியைப் போட்டான். சரி! எப்படியானால் என்ன?—உன் தகப்பனாரைக் கொன்றவனைக் கண்டுபிடிக்கும் விஷயத்தில் நான் எவ்வளவு உதவிவேண்டுமானாலும் செய்யத் தயார். இன்றைக்குச் சொல்லுகிறேன் மனப்பூர்வமாய்—"

யாதொரு தட்டுந் தடங்கலுமின்றி சிதம்பரம் செய்த மேற்கூறிய உபந்யாஸமானது, ராமஸ்வாமி மனதில் பறுபடி நம்பிக்கை உண்டுபண்ணிற்று.

சிதம்:—(மறுபடியும்) "மேலும் கொலை நடந்த இரவில் நான் மதுரையில் இருந்திருக்கிறேன். நான்காம் நாளில் உன் தகப்பனர் பிரேதந்தான் அது என்று ருஜூப்படுத்தினதும் நான் தான்."

ராம:—"தெரியும்—சரிதான்—தர்மராஜு தன்மேல் காதல் கொள்ளவில்லை என்று என் தாயார் கூறுகிறாளே."

சிதம்:—"யார்?—உன்—தாயாரா?"

ராம:—"ஆம். பாலாம்பாள்!"

சிதம்:—"ஆமாம்! மறந்துவிட்டேனே! பார்த்தாயா? நாவலில் தர்மராஜு துரைசாமி இருவர்களும் உன் தாயார் மேல் காதல் கொண்டிருந்தார்களென்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. உன் தாயார் 'இல்லை' என்கிறாள். கதைக்கும் நடந்ததற்குமுள்ள வித்தியாஸத்தைப் பார்த்தாயா!"

ராம:—"எது எப்படிப்போனாலும் கொலைசெய்தவனை எப்படியாவது கண்டுபிடித்துத்தான் தீரவேண்டும்."

சிதம்:—"செய்யவேண்டியதுதான்—ஆனால் இருபது வருஷத்திற்குப் பிறகா!—ராமஸ்வாமி! இதை விட்டுவிடு. போனது போகட்டும். பிறகு—உன் இஷ்டம். ஆனால் ஒருவேளை நாவலில் சொல்லுகிறபடி பொடிடப்பி சமாசாரம் மாதிரி ஏதாவது தெரிந்தால் என்னவோ?"

ராம:—(கைலாஸம் ஏற்கனவே சொன்னதை நினைத்து ஆச்சரியப்பட்டு) "ஆனால் பொடிடப்பிக் கதை பொய்தானே?"

சிதம்:—"தடை என்ன! அந்த இடத்தில் பொடிடப்பியே கண்டுபிடிக்கப்படவில்லை. துரைசாமி டப்பியைப் போட்டுவிட்டதாக நாவலில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் எனக்கு டப்பியும் கிடையாது. அந்தக்காலத்தில் நான் பொடியும் போடவில்லை. இந்தச் சனியன்பிடித்த வழக்கமெல்லாம் இந்த நாலைந்து வருஷமாகத்தான்—பொடிடப்பியாம்! அதில் தாமரைப் பூவேலை செய்திருந்ததாம்! உள்ளே பெயரிருந்ததாம்! என்ன அதிசயம்!"

ராம:—"ஆனால் அந்த டப்பி அப்படித்தானே!"

சிதம்:—"நாவலில் அப்படித்தானே சொல்லப்பட்டிருக்கிறது. கதை எப்படியாவது பூர்த்தியாகவேண்டும். கொலையை ஒருவன் மேல் போடவேண்டும். அதற்கு ஒரு துப்பு வேண்டும். அதற்காக பொடிடப்பி, லேஞ்சி, மோதிரம் ஏதாவது கற்பித்துக்கொள்ளுகிறது வழக்கந்தானே கட்டுக்கதைக்காரர்கள்?"

ராமஸ்வாமி மனதில், கைலாசம் அபிப்பிராயமும் சிதம்பரம் சொல்லுவதும் வித்தியாசமாகவேதோன்றினும், அவன் இரண்டில் எதுதான் உண்மையாயிருக்குமென்றுதிர்மானிக்க முடியாதவனாய்த் திகைத்தான். "பத்திரிகைகளிலும் பொடிடப்பி அகப்பட்டதாகச் சொல்லவில்லை. சிதம்பரமும் அதொன்றுமில்லை என்று சொல்லுகிறார். ஒருவேளை, கைலாஸம், தான், நாவலைப் படித்தால் புத்தி மிரண்டு இவ்வாறு தப்பிதமாய் அபிப்பிராயப் பட்டிருக்கவேண்டும். சங்கரியால் அந்தச்சமாசாரம் தெளிவாய்த் தெரிந்தால் எப்படியோ!" என்று சிந்தித்துக்கொண்டு விடைபெற்று வெளியே சென்றான்.

பதினாறாவது அத்தியாயம்.

கைலாஸமும் ராமஸ்வாமியும்.

Kylasam & Ramasamy.

கைலாஸம் ராமஸ்வாமியின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்த வண்ணமாய்த் தனது அறையில் முன்னும் பின்னும் நடந்துகொண்டு என்னென்னவோ சிந்தித்துக்கொண்டிருந்தான். இரவு பத்துமணி அடித்தது. திடீரென்று திரும்பி, "என்ன, ராமஸ்வாமி இன்னும் வரவில்லை!" என்று சொல்லிக்கொண்டு ஸோபாவில் சாய்ந்தான். ராமஸ்வாமியும் வந்து சேர்ந்தான்.

கைலா:—" 'பத்துமணி ஆயிற்றே, நீ எங்கே வரப்போகிறாய்' என்று நினைத்தேன். சிதம்பரத்தோடு ஸரஸமாய்ப் பேசிக்கொண் டிருந்திருப்பாய் என்றெண்ணுகிறேன்."

ராம:—"ஆமாம். நீ செய்ததென்ன?

கைலா:—"உன் தாயாரோடு ஒருமணிநேரம் பேசிக்கொண் டிருந்தேன். திரும்பிவந்து அரைமணி நேரமாயிற்று."

ராம:—"ஏன் நான் வரவில்லை என்று கேட்டாளோ?"

கைலா:—"ஆமாம்.—காரணம் எல்லாம் சொன்னேன். நீ சிதம்பரம் வீட்டுக்குப் போனது அவ்வளவாக அவளுக்குப் பிடிக்க வில்லை. சிதம்பரத்தின் ஸம்ஸாரத்தைப்பற்றிய ஸமாசாரங்களைக் குறித்து சொல்லிக்கொண் டிருந்தேன்."

ராம:—"அவளைப்பற்றி என் தாயாருக்கு என்ன விசாரம்?"

கைலா:—"அது எனக்குத் தெரியாது. என்னவோ, அவள் கேட்டதற்குப் பதில் சொன்னேன்."

இந்த இடத்தில் கைலாசம் பாலாம்பாளைப் பற்றித் தனக்குத் தெரிந்த ரகஸ்யத்தை வெளியிடவில்லை. பாலாம்பாளுக்கும் சிதம் பரத்துக்கும் சம்பந்தம் உண்டென்றும், சிதம்பரத்திற்கு விவாகம் ஆனதுமுதல், மனைவி போதனையால் பாலாம்பாளைக் கவனிக்க வில்லை என்றும், அதனால்தான் பாலாம்பாளுக்கு அவ்விருவர்கள் மேலும் வெறுப்பு என்றும் உணர்ந்துகொண்டான் 'பாலாம் பாளோ நம் நண்பனின் தாயார், இந்த ரகஸ்யத்தை ஒரு வேளை அவன் அறிந்திருக்கமாட்டான், இதைவெளியிட்டு அவன் மனதைப் புண்படுத்துவானேன்!' என்று எண்ணிக்கொண்டான். ஸம்பந்தத் தின் அபிப்பிராயமும் அவன் ஞாபகத்திற்கு வந்தது. 'சிதம்பரம் பாலாம்பாள்மேல் காதலால், அவளைக் கைவசப்படுத்திக் கருதி, அவள் புருஷனைக் கொன்றிருக்கவேண்டும். உண்மையில் அவன் சோமுவின் நண்பனனல், தன் நண்பன் குமாரனுகிய ராமஸ்வாமி அந்தக் கொலையை வெளிப்படுத்தச் செய்யும் முயற்சியில் தான்உதவி செய்யவேண்டியிருக்க, அப்படிச்செய்யாமல் ஏன் இடையூறு செய்ய வேண்டும்? கொலைசெய்தது அவன்தான். அந்த விஷயத்தில் பாலாம் பாளுக்கும் கொஞ்சம் சம்பந்தம் இருக்கலாம். அதனால்தான் சிதம்ப ரம் இவ்வளவு தூரம் 'வேலைமானம்' செய்கிறார்.' என்று இவ் வாறு தனக்குள் யோசிக்கலானன். பிறகு ராமசாமி, தான் சிதம் பரம் வீட்டுக்குப்போய் வந்த விருத்தாந்தங்களை எடுத்துக்கூறினன்.

கைலா:—"ராமஸ்வாமி! இந்த விஷயத்தில் நீ இவ்வளவு பிர யாசைப்படுவது உன் தாயாருக்குச் சம்மதமில்லை."

ராம:—"ஆமாம். சிதம்பரம் அந்தக் கட்டைக் காட்டு முன்ன மேயல்லவோ இந்த புத்தி இருந்திருக்கவேண்டும்! இனி என்ன செய்வது? என்னல் சும்மா இருக்க மனம் வராது. சரி! நாம்

சம்பந்தத்தோடு பேசிக்கொண்டிருந்த ஸமாசாரத்தை அவளுக்குத் தெரிவித்தாயா?''

கைலா:—“சொன்னேன். ஆனால் சிதம்பரம் சொல்வது போலத்தான் அவளும் சொல்லுகிறாள்: பத்திரிகைகளைப் பார்த்துத் தான் சங்கரியும் அறிந்திருப்பாள் என்று.”

ராம:—“உன் அபிப்பிராயம் என்ன?”

கைலா:—“என் அபிப்பிராயமா?—கொலை நடந்த காலத்தில் மங்களபுரத்தில் இருந்தவர் யாராவது அவளுக்குச் சொல்லி இருக்க வேண்டும்.—இல்லாவிட்டால் டப்பி ஸமாசாரம் அவளுக்கு எவ் விதம் தெரியக்கூடியது?”

ராம:—“‘டப்பி’ ஸமாசாரமே கட்டுமானம் என்றல்லவோ சிதம்பரம் சொல்லுகிறார்.”

கைலா:— ‘அப்படியா? உன் தாயார் உண்மை என்கிறாள்!”

ராம:—“ஆ! பொடி டப்பி பத்மவிலாஸம் தோட்டத்தில் அகப்பட்டது வாஸ்தவம் தானா?”

கைலா:—“அப்படித்தான் சொல்லுகிறாள். அது வைகைக் கரையில் கண்டுபிடிக்கப்பட்டதாம். இதைத் தன் கண்ணாலே பார்த் தாளாம்.”

ராம:—“அது யாரைச் சேர்ந்தது என்று சொன்னாள்?”

கைலா:—“அது தனக்குத் தெரியாது என்று விட்டாள்.”

ராம:—“அப்படியானால், பொடி டப்பி ஸமாசாரமே கிடை யாது என்று சிதம்பரம் ஏன் சொல்லவேண்டும்?’’

கைலா:—“அங்கேதானே இருக்கிறது ஸூக்ஷ்மம். மேலும் பரிசாரகன் சங்கரன் அவரிடம் காட்டியிருக்கிறான். ராமஸ்வாமி! இது மாத்திரம் நிச்சயம்: சிதம்பரம் நமக்கு உண்மையானவரே அல்ல!”

ராம:—“இன்று அவர் நடத்தையைக் கவனித்தது முதல் எனக்கும் சந்தேகம் உண்டாகிறது. என் தாயார் விஷயத்தில் அவர் பக்ஷமாய் இருப்பதற்கு என்ன காரணமோ? நம்விஷயத்தில் அவர் பிரதிகூலமாகத்தான் இருக்கிறார்.”

கைலாஸத்திற்குக் காரணம் தெரியும். அது பாலாம்பாளுக்கும் சிதம்பரத்திற்கும் உள்ள பரஸ்பரநேசமே. ஆனால் பாலாம்பாள் தன் நண்பனுடைய தாய். ஆகையால் தன் அபிப்பிராயத்தைவெளியிடுவது அவ்வளவாக உசிதமில்லை என்று தீர்மானித்தான்.

ராம:—"ஏன் பொடி 'டப்பி' ஸமாசாரம் விசாரணைக்கு வரவில்லை ?"

கைலா:—"நீ இப்பொழுது கேட்கும் கேள்விக்குப் பதில் அந்த சங்கரன் ஒருவன்தான் சொல்லக்கூடும்."

ராம:—"சங்கரன் இருப்பிடம் என் தாயாருக்குத் தெரியுமோ?"

கைலா:—"தெரியாதாம்."

ராம:—"என் தகப்பனருடைய பிராண சிநேகர் என்றும், தம்மாலானவரை எவ்வளவோ முயற்சி செய்ததாகவும் சிதம்பரம் சொல்லிக் கொள்ளுகிறாரே; அப்படியானால், முக்கியமான ஸாக்ஷ்ய மான பொடி டப்பியை ஏன் அவர் மறைக்கவேண்டும் ?"

கைலா:—"ஒரு வேளை கொலைசெய்தவன் இன்னார் என்று அவருக்குத் தெரிந்திராது. வேறு சரியான காரணம் இருந்திருக் கலாம். சங்கரியை விசாரித்தால் எல்லாம் வெளியாய்விடும்."

ராம:—"அப்படியானால், அவள் சங்கரனைப்பற்றியும் அறிந் திருக்கக்கூடும்."

கைலா:—"அப்படித்தான் நான் நினைக்கிறேன். டப்பி ஸமாசாரம் உன் தாயார், சிதம்பரம், சங்கரன் ஆகிய மூன்று பேர் களுக்குத் தான் தெரியும். உன் தாயாரோ, சங்கரியைத் தெரியாது என்று சொல்லிவிட்டாள். சிதம்பரம், சங்கரிக்குச் சொல்லும்படி அவ்வளவு புத்தி கெட்டவர் அல்லர். ஆதலால் சங்கரன்தான் சொல்லி இருக்கவேண்டும். சங்கரனே, பிறந்தது முதல் மங்கள புரத்திலேயே இருந்திருக்கிறான். ஆகையால் சங்கரனையும் மங்கள புரத்தில் தான் சந்தித்திருக்கவேண்டும்."

ராம:—"மங்களபுரத்தில் யாராவது 'சங்கரன்' என்று ...ப்படி இருப்பதாக ஞாபகம் வருகிறதா?"

...' அது அங்கேபோய் விசாரித்துத்தான் ஆகவேண் ...கம் இல்லை."

ராம:-"இந்த நிலைமையில் அந்தப் பெண்ணை விசாரித்துத்தான் மேலகாரியம் யோசிக்க வேண்டியதாய் இருக்கிறது. உனதெண்ணம் என்ன?"

கைலா:—"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது."

ராம:—"என்ன! டப்பியைப்பற்றிச் சிதம்பரம் பொய் சொன்னது ஆச்சரியமாகத்தான் இருகிறது!

கைலா:—"நான்தான் முன்னமேயே சொன்னேனே: அவரிடம் இருந்து நம்மால் ஒன்றும் அறியமுடியாது; அவர் பழம் புலி; கபடஸ்தர் என்று. சங்கரியை விசாரித்தால் எல்லாம் வெளியாய் விடும்."

ராம:—"அதுவும் வாஸ்தவம்தான்.—நாவல் மூலமாய்ச் சம்பந்தத்தைக் கண்டுபிடித்தோம். சம்பந்தம் மூலமாய்ச் சங்கரியைக் கண்டுபிடித்தோம். சங்கரி மூலமாய்ச் சங்கரன்—."

கைலா:—(உத்ஸாகமாய்) "சங்கரன் மூலமாய் உன் தகப்பனைக் கொன்றவன்! தெரிந்ததா? அதாவது, சிதம்பரம் நம்மைத் தடுக்காத விஷயத்தில்—"

ராம:—"அவர்தான் கொடைக்கானல் போகிறாரே."

கைலா:—(சிரித்துக்கொண்டு) "கொடையாவது? கானலாவது! போவதாவது? நாளை மங்களபுரத்தில் அவரை நமக்கு முன்னமே பார்க்கலாம்"

ராம:—"சரி. கொன்றவன் யாராக இருக்கலாம்?"

கைலா:—"நீ தான் சொல்லேன்."

ராம:—"தர்மராஜு!"

கைலா:-"அப்படியா? சரி. வரவரத் தெரியும் யார் என்று."

மறுநாள் மங்களபுரம் போவதாக இருவரும் தீர்மானித்துக் கொண்டார்கள்.

R. S. நாராயணஸ்வாமி ஐயர், B. A. B. L.